# JAMAAT UL SAHIH AL ISLAM – TAMIL NADU



ஹஸ்ரத் கலீஃபத்துல்லாஹ்
முனீர் அஹ்மது அஸீம் (அலை)

வெளியீடு

அமீர்,

ஜமா அத் தமிழ்நாடு

**Phone No :- 917502272774**

ஜுமுஆ பேருரை

தலைப்பு :

## இஸ்லாத்தில் நோன்பு நோற்பின் மதிப்பு

**01 May 2020**

**(07 Ramadan 1441 AH)**




# *The Value of Fasting in Islam*

## *இஸ்லாத்தில் நோன்பு நோற்பின் மதிப்பு*

உலகனைத்திலும் உள்ள தனது தோழர்களுக்கும் மற்றும் எல்லா முஸ்லீம்களுக்கும் ஸலாத்தினைத் தெரிவித்துக்கொண்டு, தஷஹ்ஹுத், தஅவ்வூது மற்றும் அல்.·.பாத்திஹா ஓதியபிறகு **ஹஸ்ரத் கலீ.·.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் ஜுமா பேருரையியை நிகழ்த்தினார்கள்.

ஆசீர்வதிக்கப்பட்ட ரமலான் மாதமானது முஸ்லீம்களுக்கு அல்லாஹ்வின் அருளாகும். ஆனால் அது கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டால் மட்டுமே அது நமக்கு ஒரு பெரிய நன்மையாக அமையும். இல்லையெனில் அதிலிருந்து எந்த பயனும் அடைய இயலாது. “ரமலான் ரமலான்” என்று கூச்சலிடுவது முட்டாள்தனம்! பின்னர் அவ்வளவுதான். ஒரு ஹதீஸில் இவ்வாறு கூறப்படுகிறது.

**“ரமலானின் சிறப்பை மக்கள் அறிந்திடுவார்களாயின் ஆண்டு முழுவதும் ரமலானாக இருந்திட வேண்டுமென்று மேலெண்ணம் கொள்வார்கள்”.**

மற்றொரு ஹதீஸில் இவ்வாறு காணலாம்.

**“ரமலான் மாதத்தில் நோன்பு நோற்பதோடு ஒவ்வொரு மாதமும் மூன்று நாட்கள் நோன்பு நோற்பதன் மூலம் தவறான நோக்கங்களும் சந்தேகங்களும் இதயத்திலிருந்து விலகி விடுகின்றன”.**

ரமலான் மாதத்தில் நோன்பு நோற்பதன் மூலம் மாபெரும் அருட்கொடைகளை பெற முடிகிறது. இதனால் ரமலானின் போது, போர்க்காலத்தில் கூட சஹாபாக்கள் நோன்பைக் கடைப்பிடிக்க அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுத்திருந்தனர்.

ஷ.்.பான் மாதத்தின் கடைசி நாளன்று ரசூலுல்லாஹி (ஸல்) அவர்கள் நிகழ்த்திய ஒரு உரையில் இவ்வாறு கூறியதாக ஹஸ்ரத் சல்மான் (ரலி) அவர்கள் தெரிவிக்கின்றார்கள்.

**“மக்களே! மகத்துவமும் அருள்வளமும் மிக்க மாதம் ஒன்று உங்களிடையே நிழலிட்டுள்ளது. அம்மாதத்தில் ஓர் இரவு உள்ளது. அது ஆயிரம் மாதங்களை விடச் சிறந்ததாகும். அல்லாஹ் இம்மாதத்தில் நோன்பு நோற்பதை கடமையாக்கியுள்ளான். இரவு காலங்களில் தராவீஹ் தொழுவதை சுன்னத்தாக்கியுள்ளான். எவர் இம்மாதத்தில் ஒரு சுன்னத்தைச் செய்கின்றாரோ அவர் ரமலான் அல்லாத பிற மாதங்களில் ஒரு பர்ளை நிறைவேற்றியவர் போன்றாவார். இம்மாதத்தில் ஒரு பர்ளை நிறைவேற்றுபவர் ரமலான் அல்லாத பிற மாதங்களில் எழுபது பர்ளுகளை நிறைவேற்றியவரைப் போன்றவராவார். மேலும் இது பொறுமையின் மாதமாகும். பொறுமையின் கூலி சொர்க்கமாகும். மேலும் இம்மாதம் சமுதாயத்திலுள்ள ஏழைகள், தேவையுள்ளோர் மீது அனுதாபமும் பரிவும் செலுத்த வேண்டிய மாதமாகும். இம்மாதத்தில் எவரொருவர் நோன்பாளிக்கு நோன்பு திறந்திட வசதி செய்து கொடுப்பாரோ அவரின் குற்றங்களுக்கு மன்னிப்பும், நரகத்திலிருந்து விடுதலையும் அளிக்கப்படும். அந்நோன்பாளிக்கு கிடைப்பது போன்று நற்கூலியும் கிடைக்கும். அதிலிருந்து எதுவும் குறைக்கப்பட மாட்டாது”.**

இதைக் கேட்டு சஹாபாக்கள் கூறினார்கள் **“அல்லாஹ்வின் தூதரே, நோன்பு திறந்திட வசதி செய்ய நம் அனைவருக்கும் முடியாதல்லவா”.**

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் பதிலளித்தார். **“இப்தார் என்பது திருப்திக்கு உணவைக் கொடுப்பதைக் குறிக்கவில்லை. நோன்பு திறந்திட கொஞ்சம்**

**பேரீச்சம் பழமோ அல்லது சற்று தண்ணீரோ கொடுப்பதன் மூலமும் அல்லாஹ் அந்த நற்கூலியை உங்களுக்கு வழங்குவான்".**

இந்த மாதமானது பத்து நாட்களின் மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

1) முதல் பத்து நாட்கள், **அல்லாஹ்வின் அருட்கொடைகளுடையது.**

2) பத்து நாட்களின் இரண்டாம் பகுதியானது **அல்லாஹ்வின் மன்னிப்பினுடையது.**

3) பத்து நாட்களின் மூன்றாவது மற்றும் கடைசி பகுதியானது **நரக நெருப்பிலிருந்து விடுதலையுடையது.**

இந்த மாதத்தில் முடிந்தவரை தொடர்ச்சியாக செய்ய வேண்டிய நான்கு விஷயங்கள் உள்ளன. அவற்றில் இரண்டு அல்லாஹ்வின் திருப்தியை பெறும் பொருட்டு அமைந்துள்ளது.

1) **அல்லாஹ்வின்றி வேறு இறைவன் இல்லை என்பதற்கு சாட்சியமளித்தவாறு இருக்க வேண்டும்.**

2) **அவனிடமிருந்து பாவமன்னிப்பை தேடியவாறு இருக்க வேண்டும்.**

நீங்கள் தொடர்ந்து தேட வேண்டிய மற்ற இரண்டு விஷயங்களானது

1) **சொர்க்கத்தில் நுழைவு மற்றும்**

2) **நரகத்திலிருந்து அடைக்கலம் பெறவும் அல்லாஹ்விடம் மன்றாடியவாறு இருக்க வேண்டும்.**

இந்த நான்கு விஷயங்களும் பின்வரும் துஆவில் ஒன்றாகக் கொண்டு வரப்படுகின்றன. **"லா இலாஹ இல்லல்லாஹ், அஸ்தக் பிறுல்லாஹ், அஸ்கலுல் ஜன்ன வா அவூதுபிக மினன்னார்".**

நோன்பு நோற்பு என்பது விலகல் (imsak) மற்றும் உயர்வு (rif'a) என்பதை அறிந்துக் கொள்ளுங்கள். நோன்பு நோற்பு என்பது பிற செயல்களுக்கும் வழிபாடுகளுக்கும் மேலாக ஒருபடி உயர்ந்ததாகும். மற்றெந்த செயலுடனும் ஒப்பிட முடியாத வகையில் அல்லாஹ் அதை உயர்த்திக் கொண்டான். நோன்பு நோற்பு அதன் முறைக்கு பூர்த்திசெய்து தகுதி பெறுபவரின் நற்கூலியானது அல்லாஹ்வேதான்

என்று அவன் கூறுகிறான். எல்லா நிலையிலும் நோன்பு நோற்பு அல்லாஹ்வுடையது என்று அவன் தெரிவித்தான்.

நோன்பு நோற்பு என்பது ஒரு செயல் அல்ல. அது ஒரு செயலை கைவிடுதலாகும். ஏனெனில் அது எதுவொன்றுடனும் ஒப்பிட முடியாத ஒன்றாகும். அது நோன்பிற்கும், அல்லாஹ்வுக்கும் இடையிலான ஒப்புமையை வலுப்படுத்துகிறது.

எல்லாம் வல்ல அல்லாஹ் தன்னைப் பற்றி கூறுகிறான். **"அவனைப் போன்றது எதுவுமில்லை" (42 : 12)**

தன்னைப்போல் ஒன்று (மற்றொன்று அல்லது அவனை ஒத்த ஒன்று) இருக்கலாம் என்பதை அல்லாஹ் மறுத்துவிடுகின்றான். புத்தி மற்றும் புனித சட்டம் ஆகிய இரண்டும் அவனைப் போல எதுவும் இல்லை என்பதைக் குறிப்பிடுகின்றன. அவனைப் போல் யாரும் இல்லை. அவன் தனித்துவமானவன். அவன் மட்டுமே இறைவன். எந்த பங்காளிகளும் அவனுக்கு இல்லை. அவன்தான் எல்லாம் வல்ல அல்லாஹ்.

அபு உபாமா (ரலி) அவர்கள் கூறியதாக நசாய்-யில் வந்துள்ள ஒரு கதீஸில் காணலாம். நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களை சந்தித்து எனக்கு நேரடியாக ஒரு கட்டளை வழங்குமாறு கேட்டுக் கொண்டேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் பதிலளித்தார். **"நீங்கள் நோன்பு நோற்றுக் கொள்ளுங்கள். ஏனெனில் வேறு எந்த புனிதமான செயல்களும் அதை ஒத்திருக்காது. இறைவன் தனது அடியார்களுக்காக பரிந்துரைத்த எந்த செயல்களும் அதனுடன் ஒப்பிட முடியாது என்றும் நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கின்றார்கள். இதனால்தான் அல்லாஹ் கூறியுள்ளான்" ஆதமின் மகனுடைய ஒவ்வொரு செயலும் அவனுக்கே உரியது, நோன்பைத் தவிர! நோன்பு எனக்குரியது. நானே அதற்குரிய கூலியைக் கொடுக்கிறேன்".**

**நோன்பு ஒரு கேடயமாகும். உங்களில் ஒருவர் நோன்பு நோற்றிருக்கும் நாளில் தம் நாவால் தீய சொற்களைப் பேச வேண்டாம். சச்சரவில் ஈடுபட வேண்டாம். கூச்சலிட வேண்டாம். அவரிடம் எவராயினும் வசைமொழி பேசினால் அல்லது சண்டையிட முனைந்தால் அவர் நான் நோன்பாளி என்று கூறட்டும்".**

என் ஆன்மா எவன் கைகளிலிருக்கின்றதோ அவன் மீது ஆணையாக **“நிச்சயமாக நோன்பாளியின் வாயிலிருந்து வெளிப்படும் சுவாசமானது உயர்த்தெடுதல் நாளில் அல்லாஹ்விடத்தில் கஸ்தூரி மணத்தை விட மேலானதாக இருக்கும்”.** இரண்டு மகிழ்ச்சிகள் நோன்பாளிக்குரியது. அவர் தனது நோன்பை திறந்துக் கொள்ளும் போது அவர் மகிழ்ச்சியடைகிறார். மேலும் அவர் தனது இறைவனை சந்திக்கும் போது அவர் தனது நோன்பில் மகிழ்ச்சியடைகிறார்.

நோன்பு நோற்பின் மூலம் முழுமையான தகுதியை பெறும் ஒரு நோன்பாளி எது ஒன்றுடனும் ஒப்பிடமுடியாத தனது இறைவனை சந்திக்கிறார் என்பதை அறிந்து கொள்ளுங்கள். ஒருபுறம் நாசாய்-ன் கதீஸ்படி, நோன்பு நோற்புடன் வேறு எந்த செயலையும் ஒப்பிடமுடியாது என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியிருக்கின்றார். மறுபுறம் அல்லாஹ் திருமறையில் “அவனைப்போல் வேறு எதுவுமில்லை” என்று தெரிவிக்கின்றான். இவை இரண்டும் சுட்டிக்காட்டுவது நோன்பு நோற்பவர் பெறும் மகிழ்ச்சியானது வேறு எதனுடனும் ஒப்பிட முடியாத அளவிற்கு மிக உயரிய நிலையில் அல்லாஹ் வைத்துள்ளான் என்பதையாகும்.

நோன்பை இறைவன் தன்னுடன் சேர்த்து வைத்திருக்கின்றான். நோன்பு எனக்குரியது. அதாவது உணவைப் பொறுத்தவரை அதன் சுதந்திரத்தைக் குறிக்கும் அஸ்-சமத் என்ற பண்பு எனக்கு மட்டும் உரியது. நான் அப்பண்பை உங்களுக்கு பகிர்ந்தால் கூட, அது என் மாட்சிமைக்கு மட்டுமே பொருத்தமான ஒரு வரம்புக்குட்பட்ட அம்சத்தை மட்டுமே வெளிப்படுத்துகிறது. ஒரு நோன்பாளி தனது நோன்பை முழுமையாக கடைபிடித்து, அதன் தகுதிகளுடன் அல்லாஹ்வை சந்திக்கும் போது, அதற்கு பரிசாக எது ஒன்றுடனும் ஒப்பிட முடியாத தனது அல்லாஹ்வை அவர் பெறுகிறார். இதுவே நோன்பு நோற்பின் சிறப்பு என கூற வேண்டும். அல்லாஹ் நோன்பு நோற்புக்கு சில விதிவிலக்குகள் வைத்துள்ளான். அவன் இவ்வாறு கூறுகிறான். நோன்பு நோற்பவர், தீய வார்த்தைகள், வாதங்கள், சண்டைகள் மற்றும் பொறாமைகளிலிருந்து விலகி இருக்க வேண்டும். மேலும் கூச்சலிடுதல், பாடல், உரத்த குரலில் பேசுதல் மற்றும் சத்தமாக சிரித்தல் போன்று இம்மாத இறை அருட்கொடைகளுக்கும் கிருபைகளுக்கும் களங்கம் விளைவிக்கும் செயல்களை தவிற்த்துக் கொள்ள வேண்டும். அவன் ஏதேனும் செயலுக்கு உத்தரவிடவில்லை. மாறாக சில செயல்களைச் செய்ய தடை விதித்துள்ளான். நோன்பு நோற்பு ஒரு தவிர்த்தல் என்பதால், இக்குறிப்பிட்ட விதிவிலக்குகளுக்கும் நோன்புக்கும் இடையே

தொடர்பு உள்ளது. இதனால் நோன்பு நோற்ப்பவருக்கு சில தடைகள் விதிக்கப்பட்டுள்ளது. பின்னர் அவரிடம் எவராயினும் வசைமொழி பேசினால் அல்லது சண்டையிட முனைந்தால் அந்நபர்களிடம் நான் நோன்பாளி என்று கூற அவன் கட்டளையிட்டான் அதாவது என்னைத் துன்புறுத்துகின்றவர்களே, என்னை அவமதிக்கின்றவர்களே, நீங்கள் செய்கிற இந்த செயலை நான் கைவிட்ட நிலையில் இருக்கின்றேன்.

இந்த இறை கட்டளைப்படி, அவர் பதிலுக்கு மேலே உயர்ந்து அதை கைவிட்டதாக அறிவிக்கிறார். வேறு வார்த்தைகளில் கூறுவொமேயானால் அவர்களிடம் சண்டைக்கோ போராட்டத்திற்கோ நான் விரும்பவில்லை என அவர் தாழ்மையாக கூறுகிறார். சஹீல் பின் ஸஆத் தெரிவித்த ஒரு ஹதீஸ் முஸ்லீமில் காணலாம். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். **“நிச்சயமாக, சொர்க்கத்தில் அர்-ரய்யான் என்ற பெயரில் ஒரு வாயில் உள்ளன. உயிர்த்தெழுதல் நாளின் போது இந்த வாயில் வழியாகத்தான் நோன்பாளிகள் நுழைவார்கள். அவர்களை தவிர வேறு யாரும் இந்த வாயில் வழியாக நுழையமாட்டார்கள். கடைசி நோன்பாளி நுழைந்ததும் அது மூடப்படும், பின்னர் அந்த வாயில் வழியாக வேறு யாரும் நுழைவதில்லை.**

நோன்பைத் தவிர வேறு எந்தவொரு செயலுக்கும் இத்தகைய ஒரு கட்டளை இருப்பதாக நபி (ஸல்) அவர்கள் கூறியதில்லை. வணக்க வழிபாட்டுத் துறையில் நோன்பாளி முழுமையை அடைகிறார் என்பதை அர்-ரய்யான் கதீஸ் பற்றிய இந்த குறிப்பால் நபி (ஸல்) அவர்கள் மிக தெளிவாகக் காட்டினார்கள். அதற்கு ஒத்தவை வேறு எதுவுமில்லை என்பதால் நோன்பாளி அதன் மூலம் முழுமையான தகுதியை பெறுகிறார்.

நம்பிக்கையில் உறுதியாக இருப்பதும், நம்பிக்கையில் நீடிப்பதும் இந்த நிலையை விவரிக்கிறது. இந்த நிலையில், உண்மையில் புனிதமான செயல்களை செய்ய வேண்டிய நேரத்தில் பொதுவாக அவர் செய்த முயற்சி மற்றும் அவர் அனுபவித்த சிரமங்கள் காரணமாக பழிவாங்கல் அல்லது வெறுப்பு போன்றவை அவரிடமிருந்து முற்றிலும் மறைந்துவிடும். எனவே, உணவைப் போலவே புனிதமான செயல் ஆன்மாவை வளர்க்கிறது. அவை இல்லாமலிருந்தால் ஆன்மா எப்படியாவது அழிந்துவிடும். எனவே நோன்பு என்பது அனைத்து வகையான வழிபாட்டு செயல்களின் சாராம்சமும், உச்சகட்டமும் ஆகிறது. அது நேராக உண்மை இலக்கை நோக்கி செல்கிறது. மேலும் இது மனிதனை பிற மனிதர்களிடமும் இறைவனிடமும்

தனது கடமைகளை சரியான முறையில் நிறைவேற்ற அனுமதிக்கிறது. துரதிர்ஷ்ட வசமானவர்கள் இந்த மாதத்தில் வாழ்வார்கள். ஆனால் அவர்கள் அதிலிருந்து எந்த நன்மையும் பெற மாட்டார்கள். இறை அருட்கொடைகளை அவர்கள் இழந்து விடுவார்கள்.

விண்ணுலகில் அதாவது அல்லாஹ்வும், மலக்குகளும் கேட்க்கும் நிலையில் உங்கள் வேண்டுதல்கள் எப்போதும் அமைய வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அந்நிலையில் அல்லாஹ்வின் மலக்குகள் உங்களின் இந்த வேண்டுதல்களை உலகம் முழுவதும் பரப்புவார்கள். ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமின் உறுப்பினர்கள் தங்கள் பிரார்த்தனைகளின் அளவை கணிசமாக உயர்த்த வேண்டும்.

ஹஜ்ஜுக்குப் பிறகு நோன்பு என்பது மிகவும் புகழ்பெற்ற வழிபாடாகும். ஃபித்யா இரண்டு அம்சத்தைக் கொண்டுள்ளது. அது கட்டாயமாக வழங்க வேண்டும். சுய விருப்பத்தாலும் வழங்கி கொள்ளலாம். ரமலான் மாதத்தின் நரகத்தின் வாயில்கள் மூடப்படுகின்றன. உண்மையில், இது மனிதனின் ஐம்புலன்களை குறிக்கிறது. இஸ்லாமிய நோன்பு என்பது பாவங்களுக்கு எதிரான ஒரு கேடயமாகும். நோன்பை புறக்கணிப்பது மிகவும் கடுமையான மீறலாகும். உங்களுடைய சிறு குழந்தைகளை குறைந்தபட்சம் இரண்டு ரக்-ஆத் தஹஜுத் தொழுவதற்கு பழக வைத்துக் கொள்ளுங்கள். வளர்ந்த குழந்தைகள், இளையோர்கள் அனைவரும் சுன்னத்தின்படி 4x2 ரக்-ஆத் தஹ்ஜுத் தொழுகையை நிறைவேற்ற வேண்டும்.

எனது பிரசங்கத்தை முடிப்பதற்குமுன், இந்த வாரம் எனக்குக் கிடைத்த சில இறை வெளிப்பாடுகளைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். இந்த வெளிப்பாடுகளானது, பிரஞ்சு, அரபு மற்றும் ஆங்கில மொழிகளில் உள்ளன. எனவே இந்த வெளிப்பாடுகளின் மொழிபெயர்ப்பு பின் வருமாறு :

**<u>Bismillah-ir-Rahman-ir-Rahim</u>**

# DIVINE REVELATIONS

## இறை வெளிப்பாடுகள்

On Monday 27 April 2020 at 1.45 pm after the *Zuhr* prayer (3rd day of fasting), in a state of vision (*Kashaf*) I heard in the Bait-ul-Zikr a voice say aloud (in French) :

(திங்கள் 27 ஏப்ரல் 2020 அன்று மதியம் சுஹர் தொழுகைக்குப் பிறகு, கஷ்ப் நிலையில் பைஅத்துல் திக்ரில் வைத்து பிரஞ்சு மொழியில் அல்லாஹ்விடமிருந்து குரல் ஒலியில் நான் பெற்ற வெளிப்பாடு :)

**ஹஸ்ரத் ஆதம் நபி (அலை) அவர்கள் அவருடைய காலத்தில் இருந்ததைப் போலவே, நீங்கள் இந்த பூமியில் கலீஃபத்துல்லாஹ் ஆவீர்கள். நான் உங்கள் மீது அருட்கொடைகளைப் பொழிவேன், நான் உங்களை பாதுகாப்பேன், நான் உங்களுக்கு வெற்றியைத் தருவேன். இன்றைய நாள் அருளுக்குரிய நாள், உங்கள் தவறுகளை மட்டுமே மக்கள் உங்களிடம் காண்கிறார்கள். கொஞ்சம் கொஞ்சமாக உங்கள் தவறுகளை நான் நல்லத் தகுதிகளாக மாற்றுவேன். நீங்கள் பூமியின் அரசனாகிவிட்டீர்கள். என் சிம்மாசனத்தின் ஆட்சியை நான் உங்களுக்கு கற்பிப்பேன்.**

On Wednesday 29 April 2020 after the Tarawee prayers, I received the following revelation (in English) before going to bed.

(புதன் கிழமை 29 ஏப்ரல் 2020 அன்று தராவிஹ் தொழுகைக்குப் பிறகு, நான் படுக்கைக்குச் செல்வதற்கு முன் ஆங்கில மொழியில் பின்வரும் வெளிப்பாட்டைப் பெற்றேன்.)

**அதனுடன் தொடர்புடைய உலகை ஒரு உலகளாவிய வார்த்தையாக, அதாவது "லா இலாஹா இல்லல்லாஹ்" வாக மாற்ற முஹைத்தீன், கலீஃபத்துல்லாஹ்**

**வந்துள்ளார். எனது ஏகத்துவத்தை ஏற்றுக்கொள்ளும் மனிதன் மனிதர்களில் மிக சிறந்த மனிதன். நான் அவர்களுக்காக அனுப்பியதை (கலீ∴பத்துல்லாஹ்வை) அவர்களின் பொருட்டு வாதமின்றி ஏற்றுக்கொள்பவர் மிக சிறந்த மனிதன்.**

And on Thursday 30 April 2020 at 4.35 pm (6th day of fasting), I received these duahs (prayers) in Arabic and English.

(வியாழன் 30 ஏப்ரல் 2020 அன்று (நோன்பின் ஆறாவது நாள்) மாலை 4.35 மணிக்கு, இந்த துஆக்களை அரபு மற்றும் ஆங்கிலத்தில் நான் பெற்றேன்.)

**என் இறைவா! என் எதிரிகளின் மீது எனக்கு அதிகாரம் வழங்குவாயாக!**

**என் இறைவா இந்த தேசம் என்னைப் பார்த்து கேலி செய்ய முடிவு செய்துள்ளது. நீ என்னை பாதுகாப்பாயாக!**

இந்த அருளுக்குரிய ரமலான் மாதத்தை நீங்கள் அதிகமாக பயன்படுத்திக் கொள்ள நான் பிரார்த்திக்கிறேன். அல்லாஹ் உங்கள் அனைவரையும் அவனுடைய அருட்கொடைகளால் நிரப்பி, அவனது கருணையின் கீழ் கொண்டுவந்து, நேர்மையான முறையில் நோன்பு நோற்கும் முஸ்லீம்மை தன்னிடம் பிணைத்துக் கொள்ளும் அசாதாரணமான அந்த உறவுக்கு உங்களை சாட்சியாக்கி கொள்ளட்டும்.

இன்ஷா அல்லாஹ் ஆமீன்.

**Translated by:**

**Naib Amir Azim Ahmad**

**Editing & Publishing are done by**
***AMIR***
***JAMAAT - UL-SAHIH-AL-ISLAM***
***TAMIL NADU***
**Ph No: 917502272774**